முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1459

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**27.09.2023,** புதன்கிழமை

1. ஓங்கார ஞான சொரூபமே
ஓங்கார தான தர்மமே
ஓங்கார மகா சூட்சுமமே
ஓங்காரன் என் அவதாரமே
2. அவதார ஞானியே அரங்கனே
அகிலமதில் உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி
வரமென ஆறுமுகப்பெருமான் யானும்
வழங்குவேன் சோபகிருது நங்கைத் திங்கள்
(சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 10 ம் நாள், 27.09.2023, புதன்கிழமை)
3. திங்களிலே அரங்கனும் சக்தி நிலை கூட
தொடர்ந்து தடையற உணவுமுறை ஏற்க வேணும்
வேண்டியே இதனோடு அரங்கனும்
வினவிட தொண்டர் பெருமக்கட்கு
4. வகையான கடமைகளை வழங்கி
வள்ளல் தன்மை என்றும் பிசகாத வண்ணம்
திடமுற தர்மகுணம் தவறா
தொடர்ந்து தீட்சை வழி நடக்கஅருள்புரிய
5. அருள்புரிய வருகின்ற உலகோரெல்லாம்
ஆற்றல்பட அரங்கன் வழி ஞானிகளாக
மாற்றம் கண்டு இனிதே இந்த பேருலகில் மொழிகுவேன் ஞான சித்தர் ஆட்சிக்காலத்தை
ஆற்றல்பட சடுதி உருவாக்கி ஆறுமுகன் என்தலைமை படைக்க பரிபூரணஆசி

ஞான அறிவுரை ஆசி விளக்கம் முற்றே

–சுபம்–